# இழப்பீடுகளுக்கான அலுவலகம்- இலங்கை
# வருடாந்த அறிக்கை 2022

இழப்பீடுகளுக்கான அலுவலகம்- இலங்கை

இல. 40, புத்கமுவ வீதி,

இராஜகிரிய.

## 1. அறிமுகம்

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது தனது நான்காவது ஆண்டில், 2018 ஆம் ஆண்டின் இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்ட இல 34 இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணங்க இன்னலுக்குள்ளான சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மிகுந்த நம்பிக்கையுடன் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது. குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் நோக்கங்களாவன;

1. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு தனிநபர் மற்றும் கூட்டு இழப்பீடுகளை வழங்கும் முகமாக இழப்பீடுகள் குறித்த கொள்கைகளை வகுத்து அவற்றை அமைச்சரவைக்குப் பரிந்துரை செய்தல்.
2. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் பொதுக் கல்வி, நினைவு கூறுதல் அத்துடன் குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் தொடர்பான சிறப்புக் கொள்கைகள் உட்பட அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீடுகள் தொடர்பான கொள்கைகளையும் செயற்படுத்துவதனை இலகுபடுத்துதல்.
3. நல்லிணக்கத்தை நோக்கமாகக் கொண்ட பிற வழிமுறைகளுடான இழப்பீடுகளுக்கான அலுவலகத்தன் இணக்கத்தன்மையினை உறுதிப்படுத்தும் முகமாக இணைப்புகளை நிறுவுதல்.
4. தகுதியுள்ள இன்னலுக்குள்ளான நபர்களுக்கு இழப்பீடுகளை வழங்கப்படுதல் தொடர்பாகக் கண்காணித்து மதிப்பீடு செய்தல்.

## 2. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள்

மார்ச் 31, 2022 அன்று மூன்று (03) ஆண்டுகள் நிறைவடையும் விதமாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செயற்பட்ட இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள்:

1. திருமதி. தாரா விஜயதிலக்க – தலைவர்
2. கலாநிதி. ஜே.எம்.சுவாமிநாதன் – உறுப்பினர்
3. திரு.ஏ.ஏ.எம். பாத்திஹு – உறுப்பினர்
4. செல்வி. செல்லத்தம்பி சுமித்ரா – உறுப்பினர்

உறுப்பினர், மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ (ஓய்வு) மே 24, 2021 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டதுடன் 2022 முழுவதும் உறுப்பினராகத் தொடர்ந்து செய்பட்டார். (1) முதல் (4) வரையிலான மேற்கூறிய உறுப்பினர்களின் காலப்பகுதி நிறைவடைந்தவுடன், குறிப்பிடப்பட்ட திகதிகளில் இருந்து மூன்று (03) ஆண்டுகளுக்கு பாராளுமன்ற சபையின் ஒப்புதலுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டனர். திகதி மற்றும் ஆண்டு அவர்களது பெயர்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது -

1. திருமதி. தாரா விஜயதிலக்க - தலைவர்இ (மீள் நியமனம் ஜூன் 12, 2022)
2. கலாநிதி. அஸீஸ் முபாரக் - உறுப்பினர் (ஜூலை 6, 2022)
3. திரு. ரசிக்க திஸாநாயக்க - உறுப்பினர் (ஜூலை 6, 2022)
4. திருமதி. பிரியா சிவகணநாதன் - உறுப்பினர் (ஆகஸ்ட் 5, 2022)

## 3. முக்கிய கொள்கையின் கருப்பொருட் பகுதிகள் மற்றும் வழிகாட்டுதல்களின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீடுகளை வழங்குவதற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பெப்ரவரி 2022 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மார்ச் 3, 2022 எனத் திகதியிடப்பட்ட வர்த்தமானி இல. 2269/54 இல் வெளியிடப்பட்டது. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு (பாதிக்கப்பட்டவர்களுக்கு) நிவாரணம் வழங்குவதற்காகக் கொள்கையின் அடிப்படையில் எட்டு (08)

கருப்பொருள் பகுதிகளை அடையாளம் கண்டுள்ளதுடன் இதற்கான இடையீடுகளுக்கான அணுகுமுறையினைத் தெளிவுபடுத்துவதற்கான 10 வழிகாட்டுதல்களும் இனங்காணப்பட்டுள்ளன.

- **நிவாரணம் வழங்கும் முகமாக அடையாளம் காணப்பட்ட கருப்பொருள் பகுதிகள்**
    1. வாழ்வாதார உதவி
    2. நட்டஈடு மற்றும் நிதிசார் உதவி
    3. காணி உரிமையினை மீட்டெடுத்தல்
    4. வீடமைப்பு வசதி
    5. சமூகங்களுக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி
    6. நிர்வாகம் சார் நிவாரணங்கள்
    7. சமூக உள ஆதரவு
    8. சமாதானம், நல்லிணக்கம், மீள நிகழாமை என்பவற்றினை மேம்படுத்துவத்கான நடவடிக்கைகள்

- **இழப்பீடுகளைத் தீர்மானித்தல் தொடர்பில் பின்பற்றப்படும் வழிகாட்டுதல்கள்**
    1. பாதிக்கப்பட்டவர்களிளை மையமாகக் கொள்ளுதல் - மேற்கொள்ளப்படும் அனைத்து முடிவுகளும் இன்னலுக்குள்ளான நபர்களுக்கு எது சிறந்தது என்பதனை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைதல் வேண்டும்.
    2. இன்னலுக்குள்ளான நபர்கள் இழப்பீடுகளைப் பெறுவதற்கான தகமையினை மதிப்பிடும் அளவுகோல்கள்.
    3. தகவுடைய இன்னலுக்குள்ளான நபர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடுகளுக்கான பொருத்தமான காலம், இழப்பீடுகளின் வடிவம் மற்றும் அளவு என்பவற்றினைக் கருத்திற் கொள்ளல்.
    4. இன்னலுக்குள்ளான நபர்கள் நிதிசார் நட்டஈடுகளைப் பெறுவதற்கான தகுதியினை மதிப்பிடும் அளவுகோல்கள்.
    5. இன்னலுக்குள்ளான நபர்கள் உடனடி இழப்பீடுகளைப் பெறுவதற்கான தகமையினை மதிப்பிடும். அளவுகோல்கள்.
    6. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு பல்வேறு வகையான இழப்பீடுகளை வழங்குகின்ற அல்லது வழங்குவதில் உதவக்கூடிய நிறுவனங்கள்.
    7. இழப்பீடுகளை வழங்கும் முகமாகச் சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான அளவுகோல்கள்.
    8. நம்பகத்தன்மையினைச் சரிபார்ப்பதற்கான அளவுகோல்கள்.
    9. இறந்தவர்களை நினைவுகூருவதற்கும் நினைவுச் சின்னங்களை அமைப்பதற்குமான அளவுகோல்கள்
    10. இன்னலுக்குள்ளான நபர்களின் குறிப்பிட்ட குழுக்களுக்கான சிறப்புத் தேவைகளை நிவர்த்தி செய்தல்.

## 4. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:

கடுமையான பணியாளர் பற்றாக்குறையின் காரணமாக (கீழே ”செயலகம்” என்பதன் கீழ் பார்க்கவும்), இவ் அலுவலகமானது அதன் பணிப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, இன்னலுக்குள்ளான நபர்களுக்கு ஆதரவளிப்பதற்காக அர்த்தமுள்ளதும் மிகவும் உடனடியானதுமான இடையீடுகளில் கவனம் செலுத்த வேண்டியதற்கான அவசியம் ஏற்பட்டிருந்தது எனலாம்.

### 4.1 வாழ்வாதார உதவித் திட்டம்

- **அறிவு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம்**

இன்னலுக்குள்ளான நபர்கள் வருமானம் ஈட்டும் நடவடிக்கைளில் ஈடுபடும் விதமாக அவர்களை மேம்படுத்துவத்காகவும், புதிய தொழிலினை ஆரம்பிப்பதனை ஊக்குவிப்பதற்காகவும் தொழில் முனைவோர்களை வளப்படுத்துவதற்காகவும் இழப்பீடுகளுக்கான அலுவலகமானது அறிவு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டமொன்றினை உருவாக்கியது. இந்த திட்டமானது புதிய தொழில்களை ஆரம்பிப்பத்கான வாய்ப்புகளை ஆராயும் விதமாக உள்நாட்டில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்துவது குறித்துக் கவனம் செலுத்துகிறது. 2021 ஆம் ஆண்டு தெல்லிப்பளை பிரதேச செயலகப்

பிரிவில் குடும்பத்தினைத் தலைமைதாங்கும் பெண்களுக்கு நடாத்தப்பட்ட ஆரம்பகட்ட அறிவு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்திற்குப் பின்னர் அதனைத் தொடர்ந்து பயனாளிகளின் புதிய முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு அல்லது அவர்களின் தற்போதைய வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கான பின்தொடர்தல் நடவடிக்கைகளும் 2022 இல் நடாத்தப்பட்டன. நடந்தேறிய பின்தொடர்தல் நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு:

| திகதி | இடம் | இலக்குக் குழு | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | தொழில்நுட்ப அறிவு பரிமாறப்பட்ட விடயப் பகுதி |
|---|---|---|---|---|
| 2022.04.08 | பிரதேச செயலகம், தெல்லிப்பளை (பின்தொடர்தல் நிகழ்ச்சித் திட்டம்) | பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள் | 50 | கோழி வளர்ப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி தொடர்பான அறிவு மற்றும் தொழிநுட்பம். |
| 2022.05.05 | பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் | முன்னாள் போராளிகள் | 50 | கண்காணிப்புக் கருவி (CCTV) பொருத்துதல் மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல் |
| 2022.05.06 | பிரதேச செயலகம், வெலிஓயா | இன்னலுக்குள்ளான பெண்கள் | 50 | ஊதுபத்தித் தயாரிப்பு, காளான் வளர்ப்பு |
| 2022.08.20 | பிரதேச செயலகம், கோப்பாய் | இன்னலுக்குள்ளான நபர்கள் | 50 | தேங்காய் எண்ணெய் பிரித்தெடுப்பு, திரவ சவர்க்காரத் தயாரிப்பிற்கான படிமுறைகள், மெழுகுதிரித் தயாரிப்பு, பாலினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள். |
| 2022.08.28 /29 and 30 | பிரதேச செயலகம், புத்தளம் | உள்நாட்டினுள் இடம்பெயர்ந்த குடும்பங்கள் | 39 | தேங்குப் பொருட்களைப் பயன்படுத்தி அலங்காரப் பொருட்களைத் தயாரித்தல். |
| 2022.12.16 | பிரதேச செயலகம், பட்டிப்பளை | இன்னலுக்குள்ளான நபர்கள் | 47 | தூய்மையான தேங்காய் எண்ணெய்ப் பிரித்தெடுப்புஇ புகையூட்டப்பட்ட மீன் தயாரிப்பு, யோக்கட் தயாரிப்பு, நெய் தயாரிப்பு |

- **கடன் திட்டம்**

2010 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு 2017 ஆம் ஆண்டில் மேலும் பத்து (10) வருடங்களுக்கு புதுப்பிக்கப்பட்ட கடன் திட்டமானது, இலங்கை வங்கியுடனான ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. தொழில் முனைவுத் திட்டங்களுக்காகவும், வீட்டுவசதிக்காகவும் நிதியினைப் பெற விரும்பும் பயனாளிகளுக்கு கடன் வழங்க இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக் கடன்களை வழங்குவதற்காக இலங்கை வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் தொடக்கத்தில், திறைசேரி மூலம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டது. பயனாளிகளிடமிருந்து பெறப்படும் வட்டி விகிதமானது 4% ஆக அமைவதுடன் ஆரம்பத் தொகையின் மொத்தத் தொகையில் 1% என்ற விகிதத்தில் வங்கியானது வருடந்தோறும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திகு வரவு வைக்கிறது.

| | |
|---|---|
| கடன்களை வழங்குவதற்கு ஜனவரி 2022 இல் வங்கியில் உள்ள தொகை | ரூபா. 504,910,712 |
| ஜனவரி 2022 இல் நிலுவையிலுள்ள பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 3,071 |
| 2022 இல் கடன் வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | 43 |
| 2022 இல் கடனாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை | ரூபா. 6,950,000 |
| 2021 ஆம் ஆண்டிற்கான வட்டியாக ஜனவரி 2022 இல் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தில் வரவு வைக்கப்பட்ட தொகை | ரூபா. 6,421,935 |
| டிசம்பர் 31, 2022 இல் கடன்களை வழங்குவதற்காக வங்கியில் இருப்பில் உள்ள தொகை | ரூபா. 244,720,000 |
| டிசம்பர் 31, 2022 இல் செயல்முறையில் உள்ள கடன் பயனாளிகளின் எண்ணிக்கை | 1,728 |

குறித்த பயனாளிகளை அடையாளம் காணுவதற்கான முறையாக இழப்பீடுகளுக்கான அலுவலகமானது விண்ணப்பதாரர்களுடனான நேர்முகப் பரீட்சைகளை மேற்கொள்வதற்காக ஏனைய தொடர்புடைய அதிகாரிகளுடனான நேர்முகப் பரீட்சைக் குழுவில் பங்கேற்கும் உத்தியோகத்தர்களின் ஊடாக விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப்படும் திட்டத்தின் சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து அது தொடர்பில் திருப்தி அடைந்து கடனை வழங்குவதற்காக வங்கிக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதனை பின்பற்றுகிறது. எவ்வாறாயினும், விண்ணப்பதாரரால் பிணையினைச் சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில், வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதும் கடன் வழங்கப்படவில்லை என்பதே உண்மை எனலாம்.

இத்திட்டத்தின் தாக்கத்தை மதிப்பிடும்போது, பயனாளிகளுக்கு ஏற்படும் மிகவும் சிறிய அளவிலானதொரு தாக்கத்தின் காரணமாக இத் திட்டத்தினை நிறுத்தவும், பயனாளிகளுக்கு அவர்களது சொந்த வருமானமீட்டும் வழியினை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக சிறிய அளவிலான நிறுவனங்கள் மூலம், அர்த்தமுள்ள வாழ்வாதார ஆதரவை வழங்கும் திட்டங்களுக்கு நிதியை திருப்பவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் இக் கடன் திட்டத்திற்குப் பதிலாக வேறொரு புதிய திட்டம் உருவாக்கப்படுகிறது.

## 4.2 நட்ட ஈடு மற்றும் நிதி ஆதரவு

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது அதன் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்க வெளிப்படையானதொரு செயல்முறையினைப் பின்பற்றி இன்னலுக்குள்ளான நபர்களுக்குத் தொடர்ந்தும் நிதி சார்ந்த நிவாரணத்தினை வழங்கியது.

சுகாதாரத் துறையில் ஏற்பட்ட சவால்கள் மற்றும் சிக்கலான சூழ்நிலைகளால் பணியாளர்கள் அலுவலகத்திற்குத் தவறாமல் சமூகமளிக்கின்றமை தடைப்பட்டமையினால் நிதிசார் நிவாரணங்களுக்கான விண்ணப்பங்களைச் செயலாக்குவதில் பாரியளவிலான தடை ஏற்பட்டிருந்தாலும் அப் பணியானது தொடர்ந்தது. காலத்தின் யதார்த்தங்களைக் கருத்தில் கொண்டு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான இலக்குகளும் திருத்தியமைக்கப்பட்டன.

வழிகாட்டுதல்களுக்கு இணங்க நிதிசார் நிவாரணமானது நடைமுறைப்படுத்தப்பட்டது. ஈஸ்டர் தாக்குதலுடன் முடிவடைந்த கடந்த கால நிகழ்வுகள் தொடர்பான நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்கும் மேலதிகமாக, 2022 இல் இடம்பெற்ற அரசியல் வன்முறை மற்றும் உள்நாட்டுக் குழப்பங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கான திட்டங்களையும் இவ் அலுவலகமானது வடிவமைக்க வேண்டியது அவசியமாகவிருந்தது. பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து தகவல்களைச் சேகரிப்பதற்கான புதிய வடிவங்களும், தகுதியைத் தீர்மானிப்பதற்கான வழிகாட்டுதல்களும் உருவாக்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களை ஆதரிப்பதற்காக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் நிதி சார் நிவாரணம் வழங்கப்படுகின்ற அதே வேளை பாதிக்கப்பட்டவர்களின் இழப்பை முழுமையாக ஈடுசெய்யத்தக்கதொரு மானியமாக இது கருதப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

| 2022 இல் வழங்கப்பட்ட நிதி சார் நிவாரணம் | | |
|---|---|---|
| விடயம் | | அளவு |
| 01 | மீண்டெளும் செலவிற்கான பாதீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை | ரூபா. 815.16 மில்லியன் |
| 02 | நிதிசார் நிவாரணம் வழங்குவதற்காக 'மீண்டெளும் செலவு" பாதீட்டிற்கு அப்பால் உள்ளகப் பொறிமுறையின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்த தொகை | ரூபா. 711.21 மில்லியன் |
| 03 | மீண்டெழும் செலவிற்கான பாதீட்டின் மொத்த உள்ளக ஒதுக்கீடு சதவீதத்தில் | 87.25% |
| 04 | 2022 இல் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தில் நிலுவையில் உள்ள நட்டஈட்டுக் கோரிக்கைக்கான விண்ணப்பங்கள் | 14,881 |
| 05 | 2022 இல் நட்டஈட்டினை வழங்குவதற்காக அனுமதிக்கப்பட்டு கொடுப்பனவுக்காகக் காத்திருக்கும் நட்டஈட்டுக் கோரிக்கைக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 194 |
| 06 | 2022 ஆம் ஆண்டில் கொடுப்பனவினை வழங்குவதற்காகச் செயலாக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட நட்டஈட்டுக் கோரிக்கைக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 6,981 |
| 07 | கொடுப்பனவு வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை | 2,402 |
| 08 | 2,402 வழங்கப்பட்ட கொடுப்பனவின் மொத்தத் தொகை | ரூபா. 405.3 மில்லியன் |
| 09 | டிசம்பர்,31,2022 இல் நட்டஈட்டினை வழங்குவதற்காக அனுமதிக்கப்பட்டு கொடுப்பனவுக்காகக் காத்திருக்கும் நட்டஈட்டுக் கோரிக்கைக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 4,770 |
| 10 | கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குக் கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு ஆண்டு இறுதியில் தேவைப்படும் தொகை | ரூபா. 648.91 மில்லியன் |

மேலே உள்ள தரவுகளில் 2022 வன்முறை சம்பவங்கள் குறிப்பிடப்படவில்லை. 2022 வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி சார் நிவாரணத்தினை வழங்குவதற்காகத் திறைசேரியிடமிருந்து குறிப்பிடத்தக்க அளவு கூடுதல் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதிசார் நிவாரணத்தினை வழங்கும் பணியானது நிலுவையில் உள்ளது. இருப்பினும், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் சேவையினுள் உள்வாங்கப்பட விரும்புகின்ற பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவினை வழங்கும் முகமாக உளவியல்-சமூக ஆதரவு நிகழ்ச்சித் திட்டம் நடைமுறையில் உள்ளது என்பதனையும் இழப்பீடுகளுக்கான அலுவலகானது மக்களுக்கு அறியத் தந்துள்ளது.

## 4.3 நில உரிமைகள் மற்றும் வீட்டு வசதிகளை வழங்குதல்

வடமாகாணத்தினைச் சேர்ந்த இடம்பெயர்ந்த சமூகத்தின் தேவைகளை அடையாளம் காண்பதற்காக இழப்பீடுகளுக்கான அலுவலகமானது விசேட ஆய்வினை மேற்கொண்டதுடன் யாழ்.மாவட்டத்தில் திறந்தவெளி நலன்புரி முகாம்களில் வசித்துவரும் 171 குடும்பங்களை மீள்குடியேற்றுவதில் உள்ள பிரச்சினைகளை இனங்கண்டுகொள்வது தொடர்பிலும் விசேட கவனத்தினைச் செலுத்தியது. இழப்பீடுகளுக்கான அலுவலகமானது மீளக் குடியமர்த்தும் செயல்முறையை நிறைவு செய்வதற்கான நிவாரணங்களை வழங்குவதற்கும், வாழ்வாதாரத்தை உருவாக்கும் வாய்ப்புகளினூடாக இக் குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளது.

உரித்துடைய நிலங்களை விடுவிப்பது/மாற்று நிலங்களை வழங்குவது அல்லது இழப்பீடு வழங்குவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட வேண்டிய பொருத்தமான கொள்கை சார் நடவடிக்கைகளுக்காக இழப்பீடுகளுக்கான அலுவலகமானது காத்திருக்கிறது. அத்துடன் இவ்விடயம்

தொடர்பாக குறித்த மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுடன் இழப்பீடுகளுக்கான அலுவலகமானது தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றது.

### 4.4 நிர்வாகம் சார் நிவாரணங்கள்

மாவட்ட மட்டத்தில் பங்குதாரர்களுடனான விசேட நடமாடும் சேவைகள் மூலம் இன்னலுக்குள்ளான நபர்களுக்கு, குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மோதலில் பாதிக்கப்பட்டவர்கள் இழந்த ஆவணங்களை மீளப் பெறுவதற்கு இழப்பீடுகளுக்கான அலுவலகமானது தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வட மாகாணத்தில் நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘நீதிக்கான அணுகல்’ நடமாடும் சேவையில் இழப்பீடுகளுக்கான அலுவலகமும் பங்கேற்றிருந்ததுடன், இந்தச் செயற்பாட்டின் போது இவ் அலுவலகத்தினால் 950க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிர்வாகம் சார்ந்த சேவைகளை வழங்கக் கூடியதாகவும் அமைந்தது.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் அரச ஊத்தியோகத்தர்களுக்காக அதன் ஆணை மற்றும் செயற்பாடுகள் குறித்த விழிப்புணர்வை அமர்வும் நடைபெற்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் உயிர் இழப்புகள், காயங்கள் மற்றும் சொத்துக்களை இழந்தமைக்கான இழப்பீட்டினைக் கோரி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களின் காணாமல் போன ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டன. இத்தகைய திட்டங்களின் ஊடாக 1,031 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து மீள நாட்டிற்குத் திரும்பியுள்ள இலங்கையினைச் சேர்ந்த அகதிகளுக்கான குடியுரிமை, பிறப்புச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டைகள் போன்ற சட்டப்பூர்வ ஆவணங்களைப் பெறுவதற்கு ஆதரவளிப்பதில் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஈடுபட்டுள்ளது. நாடு திரும்பியவர்களின் வேலை வாய்ப்புகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டுள்ளன.

### 4.5 உள சமூக ஆதரவு

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உளவியல் சமூக ஆதரவு பிரிவு (PSS அலகு) அதிகாரப்பூர்வமாக 2022 இல் நிறுவப்பட்டது. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உளவியல்-சமூக ஆதரவுக்கான சம்பவ முகாமைத்துவத் திட்டத்தின் ஆரம்ப கட்டமான முன்னோடி திட்டத்தின் பின்னூட்டத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலேயே பிரத்தியேக அலகு ஒன்று நிறுவப்பட்டது.

உளவியல் சமூக ஆதரவுப் பிரிவானது 05 நிர்வாக மாவட்டங்களில் சம்பவ முகாமைத்துவத் திட்டத்தை முன்னோடி நிகழ்ச்சித் திட்டமாகச் செயல்படுத்தியது. 131 பயனாளிகள் மற்றும் அவர்களது உடனடி குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி, ஆலோசனை மற்றும் உளநலப் பாதுகாப்பு, பொருளாதாரம், மருத்துவம், வீட்டுவசதி, சட்ட மற்றும் நிர்வாக ஆதரவிற்கான ஆதரவுகள் பரிந்துரைகள் வடிவில் வழங்கப்பட்டன. சிறப்புப் பயிற்சி பெற்ற சம்பவ முகாமையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட விரிவான மதிப்பீட்டின் மூலம் அடையாளம் காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில் இவ் உதவிகள் வழங்கப்பட்டன.

23 மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்கள் என நாற்பத்தாறு (46) அரச உத்தியோகத்தர்கள் சம்பவ முகாமையாளர்களாகப் பயிற்சி பெற்றனர். இந் நோக்கத்திற்காக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் சம்பவ முகாமைத்துவம் பற்றிய கையேடு உருவாக்கப்பட்டதுடன் 2021 இல் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சியானது, கோவிட் தொற்றுநோய் மற்றும் பிற சிக்கல்களினால் ஏற்பட்ட பலதரப்பட்ட சவால்களின் காரணமாக் கால தாமதமாகியது, இத்கமைய இரண்டு பயிற்சித் திட்டங்கள் மற்றும் ஒரு மீட்டெடுப்புப் பயிற்சி என்பன 2022 இல் நடாத்தப்பட்டன.

இந் நிதழ்ச்சித் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் தரவுத்தளத்தில் பதிவேற்றப்பட்டுப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டது. பயனாளிகளுக்கு திறமையான சேவையை வழங்குவதை உறுதி செய்யும் முகமாக குறித்த உளவியல் சமூக ஆதரவுக்கான தரவுத்தளமானது இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் தரவுத்தளத்தில் 2023 இற்குள் முதன்மைப்படுத்தப்படும்.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உளவியல் சமூக ஆதரவுப் பிரிவானது, அபிவிருத்தித் துறையில் உள்ள ஏனைய முக்கிய பங்குதாரர்களையும் அவர்களது செயற்பாடுகளையும் புரிந்து கொள்ளவும், தற்போதுள்ள

பரிந்துரை முறைகளை வலுப்படுத்துவதற்கான பயனுள்ள பங்குதாரர்களின் விபரங்கள் அடங்கிய வரைபினை உருவாக்கவும் முனைந்தது.

2023 ஆம் ஆண்டில் உளவியல் சமூக ஆதரவுப் பிரிவு இன்னலுக்குள்ளான நபர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்துடன் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள சமூகங்களை மையப்படுத்திய திட்டங்களின் ஊடாக சமூகங்களின் உளவியல் சமூக உணர்வுகளை கட்டியெழுப்புவதற்கும் இப் பிரிவானது செயற்படும்.

## 5. செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துதல்.

**தகவல் முகாமைத்துவ முறைமை**

இழப்பீடுகளுக்கான அலுவலகம் 2022 இல் அதன் தகவல் முகாமைத்துவ அமைப்பினை (IMS) மறுசீரமைக்க ஆரம்பித்தது. அதன் தகவல் சேகரிப்பினை நிர்வகிக்கும் முறையினை மிகவும் திறமையானதாக்கும் நோக்கத்துடன். சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கையினை உருவாக்கும் நடைமுறையினை எளிதாக்கக்கூடிய உண்மைத் தன்மையான தரவு சேகரிப்பினை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.

எழுத்து வடிவத்தில் பராமரிக்கப்படும் பதிவுகளை டிஜிட்டல் வடிவத்திற்கு மாற்றும் திட்டம் இவ் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 4800 ஆவணங்கள் ஸ்கான் செய்யப்பட்டு டிஜிட்டல் வடிவத்திற்கு மாற்றப்பட்டு தகவல் முகாமைத்துவ முறைமையில் (IMS) பதிவேற்றம் செய்யப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் அதே அமைப்பின் மேம்படுத்தப்பட்ட வடிவத்தில் உளவியல் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களைச் சேர்க்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளமுடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. டிஜிட்டல்மயமாக்கல் திட்டம் 2023 இல் நிறைவடைவதுடன் தகவல் முகாமைத்துவ முறைமையில் (IMS) தரவானது அணுகுவதற்குத் தயார் நிலையில் காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆளணியினரின் திறனைக் கட்டியெழுப்புதல்**

பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன-

- **கொள்கை சார்ந்த கூருணர்வினை ஏற்படுத்துதலும் திட்டத்தினை வடிவமைத்தலும்**

  இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்து இழப்பீடுகளுக்கான அலுவலக ஊழியர்களுக்கு விழிப்புணர்வினை வழங்குவதுடன் அறிவினை ஊட்டுவதற்காகவும், கொள்கைக்கு இணங்க 2022 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தை உருவாக்குவதற்காகவும் மூன்று நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

- **மன அழுத்தத்தினை முகாமைத்துவம் செய்வது தொடர்பிலான பயிற்சி**
  - மன அழுத்தத்தினை முகாமைத்துவம் செய்தல் , குழுவினைக் கட்டியெழுப்பபுதல் , அவசியமேற்படும் சந்தர்ப்பத்தில் ஊழியர்களுக்கு மனநலம் தொடர்பான ஆதரவினை வழங்குதல்.
- **புற்றுநோய்த் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம்**
  - புற்றுநோய்த் தடுப்பு மற்றும் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிதல் - தேசிய புற்றுநோய் நிறுவனத்துடன் இணைந்து நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்.
- **பால்நிலை சார் கூருணர்வு தொடர்பான நிகழ்ச்சித் திட்டம்**
  - பாலின அடிப்படையிலான வன்முறையும் அது பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகளின் உளவியல் மற்றும் சமூக நல்வாழ்வில் அதன் தாக்கம் பற்றிய ஒரு நிகழ்ச்சித் திட்டம் தேவை நாடும் பெண்கள் அமைப்பினால் (WIN) நடாத்தப்பட்டது.

## 6. கணக்காய்வு முகாமைத்துவக் குழு

கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் கூட்டங்களின் தலைவராக ஏ.ஏ.எம். ∴பாத்தீஹு, உறுப்பினர் அவர்கள் மார்ச், 2022 வரை செயற்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து கலாநிதி. அஸீஸ் எம். முபாரக், உறுப்பினர் அவர்கள் செய்றபட்டு வருகிறார். மேலும் இக் குழுவானது காலாண்டுக் கூட்டங்களை நடாத்தியது.

## 7. பொதுக் கணக்காய்வு

பொதுக் கணக்காய்வானது கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் (AG) மேற்கொள்ளப்பட்டது. 2021க்கான கணக்காய்வு அறிக்கையானது ஒரு வழுவற்ற அறிக்கையினை உறுதிப்படுத்தியது. 2022 இற்கான அறிக்கையின் வெளியீடு காத்திருப்பில் உள்ளது.

## 8. செயலகம்

செயலகமானது பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் தலைமையில் இயங்குகிறது. மதிப்பாய்வின் கீழ் உள்ள காலகட்டத்தில் இந்த நிலையில் பின்வருவோர் செயற்பட்டனர் –

திருமதி. நஸீமா அஹமட் – செப்டெம்பர், 2022 வரை

திரு.எஸ்.எல்.எம். ஹஸீம்– ஒக்டோபர், 2022 இலிருந்து

ஒகஸ்ட் 2, 2021 முதல் 2022 செப்டம்பர் வரையிலான தாம் வெளிநாடு செல்லும் காலப்பகுதி வரை இவ் அலுவலகத்தின் முதல் முழு நேர பணிப்பாளர் நாயகமாகவும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றிய திருமதி நஸீமா அஹமட் அவர்கள் ஆற்றிய சேவையினை நாங்கள் நினைவுகூர்வதுடன், அவர் பல்வேறுபட்ட சவால்கள் நிறைந்த சூழ்நிலைகளிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அர்த்தமுள்ள சேவையை வழங்குவது தொடர்பிலான கலாச்சாரத்தை வரையறுப்பதிலும் உதவியுள்ளார் எனக் குறிப்பிட முடியும்.

செயலகத்தில் உள்ள பதவி நிலைகள் பின்வருமாறு:

| பதவி நிலை | அனுமதிக்கப்பட்ட பதவி நிலை எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 01 | - |
| பணிப்பாளர் | 01 | 01 |
| பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 04 | 01 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | - |
| உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | - |
| இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர் | 22 | 09 |
| மொழிபெயர்ப்பாளர் | 01 | - |
| கணக்காய்வு உதவியாளர் | 01 | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 30 | 09 |
| சாரதி | 07 | 02 |
| அலுவலக உதவியாளர் | 07 | - |
| பாதுகாப்பு ஊழியர் | 01 | - |
| **மொத்தம்** | **77** | **23** |

இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களின் பதவிகளில் கணிசமான எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் காணப்படுவதுடன், இந்நிலை இவ் அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு வெளிப்படையானதொரு தடையாக அமைந்துள்ளது. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மூன்று (03) முழு நேர ஆலோசகர்களின் சேவைகள் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (IOM) மூலம் பின்வரும் பணிப் பகுதிகளின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ளன.

1. ஆலோசகர் – சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம்
2. ஆலோசகர் – உள சமூக ஆதரவு
3. ஆலோசகர் – தகவலை நிர்வகித்தல் மற்றும் பரவலாக்கம்

## 9. நிதி முன்னேற்ற அறிக்கை

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடாக ரூபா.815.16 மில்லியனைப் பெற்றது.

| விடயம் | ஒதுக்கீடு (ரூபா.மில்லியனில்) | பெற்றுக்கொண்ட முற்பணம் (ரூபா.மில்லியனில்) | செலவினம் (ரூபா.மில்லியனில்) | முற்பணத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் விகிதத்தில் |
|---|---|---|---|---|
| சம்பளம் மற்றும் ஏனைய ஊதியங்கள் | 50.60 | 37.02 | 47.72 | 129%* |
| ஏனைய மீண்டெழும் செலவினங்கள் | 53.30 | 37.51 | 49.01 | 131%* |
| நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் | 711.21 | 406.00 | 406.00 | 100% |
| **உப கூட்டுத்தொகை** | **815.11** | **480.53** | **502.73** | |
| மூலதனம் | 0.05 | - | 0.045 | - |
| **கூட்டுத்தொகை** | **815.16** | **480.53** | **502.78** | **105%*** |

(வங்கியிலிருந்து பெறப்பட்ட வட்டியின் மூலம் அல்லது வங்கியில் வரவு வைக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி பற்றாக்குறையானது நிர்வகிக்கப்பட்டது.)

## 10. அங்கீகாரங்கள்

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பல முக்கிய திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காக இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்புக்கு (IOM) உதவிய ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கு (UNO) இற்குத் இழப்பீடுகளுக்கான அலுவலகம் தனது பாராட்டுகளைப் பதிவு செய்ய விரும்புகிறது.